வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

<u>ந.க.எண். 2775/ஆ2/2023 நாள் 30.11.2023</u>

பொருள் : பள்ளிக்கல்வி –உடற்கல்வி – திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 17 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவ/ மாணவியர்களுக்கு மாநில அளவிலான குடியரசு தின குழு (RDG) விளையாட்டு போட்டிகளில் மாணவ மாணவியர் பங்கேற்க செய்யவும், போட்டி நடத்துவது தொடர்பாக இணைப்பில் காணும் உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை பணிவிடுப்பு செய்ய தெரிவித்தல் – சார்பு

பார்வை : 1. திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண். 8810 /ஆ7/2023 நாள். 29.11.2023
2. சென்னை பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.000535/எம்இ4/2023 நாள்.31.10.2023

----

பார்வை 2 இல் காணும் செயல்முறைகளின் படி 2023 – 24 ஆம் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான 17 வயதிற்குட்பட்ட மாணவ/ மாணவியற்களுக்கான குடியரசு தின குழு (RDG) போட்டிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 02.12.2023 முதல் 04.12.2023 வரை மாணவிகளுக்கும் மற்றும் 05.12.2023 முதல் 07.12.2023 வரை மாணவர்களுக்கு பல்வேறு மையங்களில் நடைபெறுவதாக பார்வை – 1 இல் காணும் கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே இப்போட்டியில் கலந்துகொள்ள வேலூர் மாவட்டத்தின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர்களை உரிய பாதுகாப்புடன் அழைத்து சென்று போட்டியில் பங்கேற்கவும், உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள சார்ந்த ஆசிரியர்கள் நடுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நடுவர்களுக்கான கூட்டம் 01.12.2023 தேதி மாலை 5.00 மணிக்கு திருச்சி ஸ்ரீரங்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறுவதால், நடுவராக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களை 30.11.2023 தேதி பிற்பகல் முதல் பணிவிடுப்பு செய்து அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.

1. ஆசிரியர்களின் பெயர் பட்டியல்
2. போட்டிகளுக்கான அட்டவணை

// ஓம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்
அரசு/ நிதியுதவி/ மெட்ரிக் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.